**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – அதிக உதவித் தேவைப்படும் (High Support Need) மாற்றுத்திறனாளிகள் தங்களுடன் ஒரு உதவியாளரை வைத்துக் கொள்ள ஏதுவாக அவர்களுக்கு ரூ.1000/- உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் ஏப்ரல் 2020 முதல் ஜூலை 2021 வரை கண்டறியப்பட்ட 757 கூடுதல் பயனாளிகளுக்கு நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந–1(2))த் துறை**

அரசாணை (D) எண்.29

நாள்: 26.08.2022
சுபகிருது, ஆவணி–10,
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (ப) எண்.27, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந2) துறை, நாள் 24.10.2019.
2. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடித எண் 3053/அ.ம.இ.4/2020, நாள் 10.06.2020

-----

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், அதிக உதவி தேவைப்படும் (High support need) மாற்றுத் திறனாளிகள் தங்களுடன் ஒரு உதவியாளரை வைத்துக் கொள்ள ஏதுவாக, மாதம் ஒன்றிற்கு உதவித்தொகையாக ரூ.1000/- வீதம் 800 மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கும் திட்டத்தினை 2019–2020 நிதியாண்டு முதல் ஆண்டிற்கு ரூ.96,00,000/- தொடர் செலவினத்தில் செயல்படுத்திட நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில், 2020–2021–ஆம் நிதியாண்டில் மதிப்பீடு குழு மூலமாக தேர்வு செய்யப்பட்டு, காத்திருப்போர் பட்டியலில் உள்ள அதிக உதவித் தேவைப்படும் மாற்றுத் திறனாளிகளின் மொத்த எண்ணிக்கை 757 பயனாளிகளுக்கு 2 வருடங்களுக்கு கூடுதலாக தேவைப்படும் ரூ.1,81,68,000/-ஐ நடப்பாண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் (2022–2023) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையான ரூ.420 இலட்சத்திற்குள், கீழ்க்கண்டவாறு இக்கூடுதல் செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| | |
|---|---|
| 2020–2021 ஆம் ஆண்டிற்கு 757 பயனாளிகளுக்கு 12 மாதங்களுக்கு கூடுதலாக தேவைப்படும் தொகை (757x12x1000) | ரூ.90,84,000/- |
| 2021–2022 ஆம் ஆண்டிற்கு 757 பயனாளிகளுக்கு 12 மாதங்களுக்கு கூடுதலாக தேவைப்படும் தொகை (757x12x1000) | ரூ.90,84,000/- |
| **மொத்தத் தொகை** | ரூ.1,81,68,000/- |

(த.பி.பா.)

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, அதிக உதவித் தேவைப்படும் (High Support Need) மாற்றுத்திறனாளிகள், தங்களுடன் ஒரு உதவியாளரை வைத்துக் கொள்ளும் திட்டத்தின் கீழ், ஏப்ரல் 2020 முதல் ஜூலை 2021 வரையிலான காலங்களில் கண்டறியப்பட்டு, காத்திருப்பு பட்டியலில் உள்ள 757 பயனாளிகளுக்கு மாதாந்திரமாக ஒரு பயனாளிக்கு ரூ.1000/- வீதம் உதவித்தொகை வழங்க ஆண்டு தொடர் செலவினமாக ரூ.90,84,000/- (ரூபாய் தொன்னூறு இலட்சத்து எண்பத்து நான்காயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து நடப்பாண்டுக்கு இவ்வரசாணை வெளியிடும் நாள்முதல் கணக்கிட்டு வழங்க மாற்றுத்திறனாளிகள் நல ஆணையருக்கு அனுமதியளித்து ஆணையிடப்படுகிறது.

4. மேலே பத்தி-3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

"2235-சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02-சமூக நலன் - 101- மாற்றுத் திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் - NI - அதிக உதவி தேவைப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவியாளர் உதவித் தொகை வழங்குதல் - 309 - உதவித் தொகை - 03 - குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை".

(IFHRMS - த.தொ.கு.2235-02-101- NI - 30903)

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல்சாரா எண்.40919/நிதி(சந)/2022, நாள்.23.08.2022-ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ஆனந்தகுமார்
அரசு செயலாளர்

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (வழி)
மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.

<u>நகல்:-</u>
செயலரின் தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை-9.
நிதித் (ச.ந)துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
26/08/2022